**ஜாஎல நகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, ஜாஎல நகர சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 5,492,515 அதிகரித்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | கணக்குகளில் வேையான சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும். | இறுதிக் கொடுப்பனவுக்கான அறிக்கையில் காணப்படும் பெறுமதியும் வேறுபடலாம் என்பதால் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் பெறுவனவுகளுக்கு இடையேயான வேறுபாடும் அடுத்து வரும் ஆண்டில் சீராக்கல் செய்யப்படும். |
| (ii) | எட்டு ஆண்டுகளுக்கு கேள்வி வைப்பாகப் பெறப்பட்ட ரூபா 200,000 க்குரிய காசோலைக் கொடுப்பனவு மறுக்கப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு | தேறாத காசோலை வருவாயிலிடப்படக் கூடாது | 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கில் சீராக்கல் செய்யப்படும். |

வைக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2017 ஆம் ஆண்டின் போது சபை கொள்வனவு செய்த ரூபா 1,531,060 பெறுமதியான முச்சக்கரவண்டி இரண்டும் மூலதனமாக்கப்படவில்லை. | குறித்த சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கில் சீராக்கல் செய்யப்படும். |

**(ஆ) கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 02 கணக்கீட்டு விடயங்களது மீதிகளுக்கும் துணைப் பதிவேட்டு மீதிகளுக்குமிடையே ரூபா 6,459,002 வித்தியாசம் நிலவியது. | வேறுபாடு இணக்கம் செய்யப்பட்டு ஆண்டுகளில் சீராக்கல் செய்ய வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குத் தயாரிப்புக்கு முன்னர் திருத்தம் செய்யப்படும். |

**(இ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையின் கொம்போஸ்ட் பிரிவை நிர்மாணிக்கையில் 2012 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்த வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணத்தில் ரூபா 153,749 மீளாய்வாண்டின் இறுதியிலும் அறவிடப்படாதிருந்தது. | கொடுப்பனவின் போது வழங்கப்பட்ட முற்பணம் அறவிடப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 77 ஆம் | நகர சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 05 ஆம் வட்டாரத்தில் | அத்துமீறிய நிர்மாண வேலைகள் | நகர அபிவிருத்தி அதிகாரசபை அக்கடைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவு | அமைக்கப்பட்ட அத்துமீறிய 23 கடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காது தீர்வை இலக்கம் வழங்கப்பட்டு அவை சட்ட பூர்வமாக்கப்பட்டிருந்தது. | தொடர்பாக நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | அகற்றுவதற்கு வழக்கு தொடர்ந்துள்ளது. நீதிமன்றக் கட்டளை பெறப்பட்டதும் அகற்றப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 272 | 2007 தொடக்கம் 2011 வரை 09 மாதங்களுக்குரிய உறுதிச் சான்றுகள் தொலைந்து போனமை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை. | பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்சமயம் காப்பகம் அமைக்கப்பட்டு ஆவணங்கள் பாதுகாப்பாக உள்ளன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 315(3) மற்றும் 316(1)(இ) | 2010, 2011 ஆம் ஆண்டுகளில் 02 மாதங்களுக்கான பற்றுச்சீட்டுக்களும் அடியிதழ் சேர் புத்தகங்களும் தொலைந்து போனமை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பற்றுச் சீட்டுக்களும் அடியிதழ் சேர் புத்தகங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். நிர்வாகம் சிறப்பாக அமைய வேண்டும். | அடியிதல்சேர் தொலைந்தமை அறிவிக்கப் படவில்லை. தற்போது ஆவணங்கள் பாதுகாப்பாக உள்ளன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 51,255,753 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 29,109,990 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 42,950 | 44,211 | 27,602 | 23,558 | 36,675 | 41,804 | 26,630 | 21,011 |
| (ii) | வாடகை | 9,337 | 9,624 | 9,624 | - | 8,560 | 8,875 | 8,835 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 738 | 1,166 | 1,166 | - | 462 | 1,330 | 1,330 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 94,614 | 50,626 | 50,626 | 1,522 | 64,369 | 28,626 | 28,626 | 172 |

### 2.2.2 தீர்வையும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு முடிவிலிருந்த தீர்வை நிலுவை ரூபா 21,010,864 ஆகும். இதில் 45 சதவீதமான ரூபா 9,484,116 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் முடிவில் இருந்த தீர்வை நிலுவை ரூபா 23,558,001 ஆகும். இதில் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் ரூபா 5,156,777 மாத்திரமே அறவிடப்பட்டு ரூபா 18,401,224 அறவிடப்பட வேண்டியிருந்தது. | வருவாய் நிலுவையை அறவிட முறையான விதி முறைகள் அமுலாக்கப்பட வேண்டும். | 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை நிலுவையில் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் ரூபா 5,156,777 அறவிடப்பட்டுள்ளது. அது தீர்வை நிலுவையின் 21.9 சதவீதமாகும். எஞ்சியவை எதிர்வரும் 03 காலாண்டுகளுக்குள் அறவிடப்படும். |
| (ஆ) | தகர்த்து அகற்றப்பட்டமை காரணமாக ரூபா 375,016 மற்றும் வறுமை ஒழிப்பு ஆதரவாக ரூபா 30,207 என ரூபா 405,223 தீர்வையானது கிராம உத்தியோகத்தரின் பரிந்துரை இல்லாது பதிவழிக்கப்பட்டிருந்தது. | தகர்ப்பு வறுமை ஒழிபு ஆதவவு சம்பந்தமாக கிராம உத்தியோகத் தரது பரிந்துரை பெறப்பட வேண்டும். | சபை அறிமுகஞ் செய்துள்ள மாதிரிப் படிவத்தில் கிராம உத்தியோகத்தரது பரிந்துரை மற்றும் பிரதேச செயலாளரது அங்கீகாரம் என்பன பெறப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை எல்லைக்குள் வர்த்தகம் புரியும் 08 | முதலீட்டுச் சபையை அமைப்பதற்கான | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| வியாபார நிறுவகங்களிலிருந்து மீளாய்வாண்டின்போது சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படவில்லை. | அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவினது (இ) பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆம் ஆண்டில் 06 ஒப்பந்தங்களுக்கு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட போதும், 2109 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் அச் செயற்திட்டங்கள் அமுலாகவில்லை. | உடன்படிக்கைப் பிரகாரம் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டில் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 05 செயற்திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 4,500,000 நிதியில் வீதிகளுக்கு ABC கலவைகளை மாத்திரம் பயன்படுத்தி ரூபா 715,858 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உடன்படிக்கைப் பிரகாரம் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iii) | மீளாய்வாண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழும் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 4,049,012 பெறுமதியான 05 | உடன்படிக்கைப் பிரகாரம் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட போதும் செயற்திட்டங்கள் அமுலாகவில்லை.

**(ஆ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் 2015-2030 காலப்பகுதியின் போது அடைய வேண்டிய அபிவிருத்தி நோக்கங்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டு அவற்றை அமுலாக்குவதற்கு 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சபை நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அடையப்பெற வேண்டும். | நோக்கங்களையும் இலக்குகளையும் அடைதல், இனங்காணுதலுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2019 மார்ச் 14 ஆந் திகதி அமுலாக உள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரிவுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த லேக்சிட்டி காணி கட்டிடத்தின் 215 விண்ணப்பங்களில் 61 க்கு மாத்திரம் 2014 தொடக்கம் 2018 வரை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2018 செப்டம்பர் 19 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின் போது மொத்தக் காணியிலும் 80 சதவீதத்திற்கும் அதிகமான கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. புதிய மதிப்பீடு தயாரிக்கப்படாததுடன், 2018 செப்டம்பர் 30 ஆந் திகதியளவில் அறவிடப்பட்ட தீர்வயிலும் ரூபா 403,451 நிலுவை நிலவியது. | புதிய நிர்மா வேலைகளுக்கு புதிய மதிப்பீட்டின் படி கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்ட 17 செயற்திட்டங்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 2,260,628 சேர்த்துக் கொள்ளப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | பெறுமதி செர் வரி உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | இதற்கு உடன்படிக்கை செய்யும் போது பெறுமதி சேர் வரி அடங்கலாக உடன்படிக்கை செய்யப்படாதிருந்தது. கொடுப்பனவிற்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டது. |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (ஆ) | உரித்துறுதி மூலம் 02 றூட், 30 பர்ச்சர்ஸ் விசாலமான வேவெல விளையாட்டுத் திடல் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், விளையாட்டுத் திடலுக்கு கால்வாய்களுக்குமிடையே அத்துமீறிய நிர்மாண வேலைகள் நடைபெற்றிருந்தமை 2018 தொடக்கம் 18 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. | சபையின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (இ) | ABC வேலையை வழங்கி 08 தொன்னுக்கு குறையாத வீதி உருளையின் மூலம் ஒரு கியூப்பை வளைப்பதற்கு 05 செயற்திட்டங்களுக்கு வெவ்வேறு றேட்களில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | BSR அல்லது மாவட்ட விலைக் குழுவின் விலைக்கேற்ப மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (ஈ) | நகர சபைக்குரிய 37 ஏக்கர், 03 றூட், 28 பேர்ச்சர்ஸ் லேக்சிட்டி காணி பிரிவுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் போது 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 20(1)(அ) பணிப்புரையின் படி | அதிகாரச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். பொது நடவடிக்கைகளுக்கு உசிதமான காணி பெறப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை. |

அங்கீகரிக்கப்பட்டிருந்தது. சபைக்கு வழங்கப்பட்ட C, D, G, L, H எழுத்துடைய காணித்துண்டுகளில் L பிரிவு 01 ஏக்கர், 03 றூட், 26 பர்ச்சர்ஸ் கால்வாய் ஆகும். பு காணி நில அளவையில் காட்டப்படாததாகும். அந்த 2 காணிகளும் பொதுப் பாவனைக்கு உகந்தவை அல்ல.

## 3.4 பொருட் கொள்வனவு

### 3.4.1 வழங்கலும் சேவைகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மே 01 முதல் 2019 ஏப்ரல் 03 வரை பாதுகாப்புச் சேவை வழங்கப்படுகையில் பொருட் கொள்வனவுகள் குழிகளில் பரிந்துரைக்கப்பட்ட குறைந்த விலைக்கு ஒப்பந்தம் வழங்கப்படாதும் குறைந்த விலையைச் சமரப்பித்த ஒப்பந்தத்தையும் புறக்கணித்து மூன்றாவது அதிகூடிய விலை தெரிவு செய்யப்பட்டிருந்தது. இது பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1(இ) மற்றும் (ஈ) என்பவற்றிற்கு முரணானதாகும். பொருட் கொள்வனவுக் குழு சேவை விங்கப்படாதிருந்த நிறுவனத்தின் சேவை தொடர்பாகத் திருப்தி அடையாதிருந்தும் சேவை வழங்குகையில் தரத்தைப் பற்றிக் கவனம் செலுத்தவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு சேவையைப் பெறும் போது தொழில்நுட்பக் குழு மற்றும் செயலாளரால் அமைக்கப்பட்ட பொலிஸ் உப பரீட்சகர் அடங்கிய 05 பேர் கொண்ட குழு வழங்கிய தீர்மானம் கருத்திந் கொள்ளப்பட்டுள்ளது. |

### 3.4.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நகர சபை அலுவலக உட்புறத்தே பீங்கான் செங்கற்கள் ஆகியவற்றைப் பதிப்பது சம்பந்தமான வேலைக்கு பொருட் | பொருட் கொள்வனவு வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6 பிரகாரம் கேள்விகளைத் திறப்பதற்கான அறிக்கை கோவையில் உள்ளடக்கப்படவில்லை. கடல் பதிப்பதற்குத் தெளிவான விலை ரூபா 1,299,667 ஆகும். எவ்வாறாயினும், ரூபா 1,244,787 க்கு மாத்திரமே அங்கீகாரமிருந்தால் ரூபா 54,885 க்கு அங்கீகாரம் இருக்கவில்லை. | வேண்டும். | |
| (ஆ) | சபையின் கூட்ட அறையின் பின்புறத்தே பெயர்ப்பலகைகளை 8 அங்குலத்தில் நிறைவேற்றுவதற்கு ரூபா 225,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதனால் ரூபா 115,000 அதிகமாகச் செலவாகியது. பென்ட்றி கபட் ஆகியவற்றிற்கு ரூபா 206,360 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2018 டிசம்பர் 05 ஆந் திகதிய பரிசீலனையின் போது சக்தியற்ற மரப்பலகை பயன்படுத்தப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. | ஒட்டுமொத்தப் பணிக்குமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். மதிப்பீடு உடன்படிக்கைப் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | வேவெல தேவாலய ஒழுங்கையில் கறிகளைப் பதித்து தார் பூசுவதற்கு ரூபா 262,133 செலவழித்து 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வேலை முடிவடைந்திருந்தது. 2018 செப்டம்பர் 18 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின் போது வீதியில் வெடிப்பு ஏற்பட்டு கார் கழன்று இருந்தது. | குறித்த வேலை சரிவர நடைபெற வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | கனுவன நகர சபை எல்லையிலிருந்து நகர சபை எல்லை வரை தெபா எலவில் இயந்திரத்தைப் பயன்படுத்தி சுத்திகரிப்பதற்கு ரூபா 343,980 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதிய நேரடிப் | தொழில்நுட்ப உத்தியோகத்தரது மேற்பார்வையும் பரிந்துரையும் இதற்கு அவசியம். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

பரிசோதனையின் போது அது நடைபெற்றிருந்ததாகத் தோற்றவில்லை. மிகவும் குறுகிய இப்போதையில் இயந்திரத்தைப் பயன்படுத்த இயலாது.